பெயராலேயே "சோ" என அன்புடன் அழைக்கப்பட்டார். மேலும், 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். தொலைக்காட்சித் தொடர்களிலும் புகழ்பெற்ற திரு. சோ. ராமசாமி அவர்கள், "இந்து மகா சமுத்திரம்", "மகாபாரதம் பேசுகிறது", "வால்மீகி ராமாயணம்" போன்ற ஆன்மீக நூல்கள் உட்பட 25-க்கும் மேற்பட்ட நூல்களையும், 14 திரைப்படங்களுக்கு கதையும் எழுதியுள்ளார். பத்திரிகைத் துறை சேவைக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். 1999 முதல் 2005 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா, கர்நாடக இசைக் கலைஞர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரைப்பட பின்னணிப் பாடகரும், பிரபல கர்நாடக இசை விற்பன்னரும், இசைத் துறையில் அளப்பரிய பணியாற்றியவருமான டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா அவர்கள் 22-11-2016 அன்று உடல் நலக் குறைவால் தனது 86-வது வயதில் காலமானார் என்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மறைந்த டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா அவர்கள் தனது ஆறாவது வயதில் இசைப் பயணத்தைத் தொடங்கி, கர்நாடக இசையில் பல புதிய இசை வடிவங்களை உருவாக்கியவர். 25,000-க்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகளை பல்வேறு நாடுகளில் நடத்தியவர். இவர் சிறந்த பின்னணிப் பாடகர் மற்றும் சிறந்த இசை அமைப்பாளருக்கான தேசிய விருது, பத்மஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷன் மற்றும் பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான "செவாலியே" உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

2005 ஆம் ஆண்டில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி "ஜெய ஜெய லலிதே" என்ற ராகத்தை அர்ப்பணித்த அவரின் திறமையைப் பாராட்டி, தமிழக அரசின் சார்பில் "கந்தர்வ கான

2017 ஜனவரி 24] [பேரவைத் தலைவர்]

சாம்ராட்” என்ற பட்டத்தை, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியது இங்கு நினைவுகூரத்தக்கது.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரை உலக நண்பர்களுக்கும், ரசிகப் பெருமக்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(உ) திரு. பிடல் காஸ்ட்ரோ, கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கியூபா நாட்டின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவரும், விடுதலை பெற்ற நாட்டினை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்று உலக நாடுகளிலே புரட்சியாளர்களுக்கு உந்து சக்தியாய் திகழ்ந்தவரும், 50 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக நல்லாட்சி புரிந்தவருமான திரு. பிடல் காஸ்ட்ரோ அவர்கள் தனது 90-வது அகவையில் 25-11-2016 அன்று மறைந்த செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவர் துணிச்சலுக்கும், அசாத்திய முடிவுகளுக்கும் பெயர் பெற்றவர். இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவு கொண்டு ஆட்சி புரிந்தார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)